நகரமன்றம் குடியாத்தம் நாள் : **21.02.2019**

# அறிவிப்பு

**2019–**ம் ஆண்டு பிப்ரவரி மாதம் **21–**ம் தேதி வியாழன் கிழமை முற்பகல் **12.30** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்

**முன்னிலை :திரு.ச.செல்வபாலாஜி,பி.இ., நகரமன்ற தனி அலுவலர்**

# கூட்டநிரல்

1. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் இனங்களுக்கு 01.04.2019 முதல் 31.03.2022 வரை உள்ள 3– ஆண்டு காலத்திற்கு சுங்கம் வசூல் செய்ய குத்தகை மூலம் ஒப்படைக்க பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி 07.02.2019–ம் தேதி கோரியதில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கீழ் காணும் இனங்களுக்கு 2016–2019–ம் ஆண்டின் குத்தகை தொகையினை விட கூடுதலாக வழங்கியுள்ளனர். எனவேவரிசை எண்.3ல் காணும் நபர்கள் வழங்கிய ஏலம் /ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **இனம். எண்.** | **தற்போது வழங்கிய ஒப்பந்தப்புள்ளிதாரர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை** | **குறிப்பு** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | **சந்தப்பேட்டை வாரச்சந்தையில் சுங்கம் தண்டல் செய்யும் உரிமம்** | | |
| | ஏலம் /ஒப்பந்தப்புள்ளியினை யாரும் கலந்துக்கொள்ளவில்லை | 0 | மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விடலாம் |
| **2.** | **தரணம்பேட்டை தினசரி காய்கறி சந்தை (ராபின்சன் குளக்கரை மேற்கு பகுதியில் உள்ள நிரந்தர நகராட்சி கடைகளுக்கு பின்புறம்) மட்டும் மற்றும் பலமநேர் ரோட்டில் உள்ள காமராஜர் படிப்பம், கஸ்தூரிபாய் தெரு, காளியம்மன் கோயில் ஆகிய இடைப்பட்ட இடங்களில் உள்ள தற்காலிக கடைகள் ஆகியவைகளில் சுங்கம் தண்டல் செய்யும் உரிமம்.** | | |
| 1 | சி.மாயன் த/பெ. சொக்கலிங்கம் முதலி 1.ஏ.தாழையாத்தம்பஜார் குடியாத்தம். | ரூ.61,05,000/ | அரசாங்க மதிப்பு ரூ.48,57,063/ ஆனால் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.44,15,512/–ல் ரூ.17,05,388.00 வரப்பெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் அதிகமாக வரிசை எண்.2–ல் காணும் நபர் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார் . |
| 2 | பி.சத்தீஷ்குமார் த/பெ.பெருமாள், 74–புதுத்தெரு, கௌதமபேட்டை, கஸ்பா, குடியாத்தம். | ரூ.61,20,900/ | |
| 3 | இ.ரகுராமன் த/பெ. ஜி.ஈஸ்வரன், 6/12,திருவள்ளுவர்நகர், பிச்சனூர் குடியாத்தம். | ரூ.48,00,000/ | |

| இனம். எண். | தற்போது வழங்கிய ஏலதாரர்கள் | ஏலம்தொகை | குறிப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4 | சி.என்.தட்சணமூர்த்தி தபெ நடராஜ முதலி, 114/44,நரி முருகப்பா தெரு, பிச்சனூர் குடியாத்தம். | 60,50,000.00 | |
| **3.** | **தரணம்பேடை தினசரி காய்கறி சந்தையில் 10 அரிசி கடைகளில் சுங்கம் தண்டல் செய்யும் உரிமம்.** | | |
| 1 | எம்.ஜீவா தபெ எஸ்.ஜீ.எம்.மோகன முதலி, 6,அழகு பெருமாள் முதலி தெரு, பிச்சனூர், குடியாத்தம். | ரூ.1,46,000.00 | அரசாங்க மதிப்பு ரூ.1,45,605/ ஆனால் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.1,32,368/–ல் ரூ.22,132.00 வரப்பெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் அதிகமாக வரிசை எண்.4–ல் காணும் நபர் ஏலதாரர்வழங்கியுள்ளார். |
| 2 | வி . பூபதி, தபெ வாசுதேவ முதலி, 67,ஆணைகட்டி கணபதி முதலி தெரு, பிச்சனூர், குடியாத்தம். | ரூ. 1,45,800.00 | |
| **இனம். எண்.** | **தற்போது வழங்கிய ஏலதாரர்கள்** | **ஏலம்தொகை** | **குறிப்பு** |
| 3 | எம்.ஜீவா,தபெ, எஸ்.ஜீ.எம்.மோகன முதலி, 6,அழகு பெருமாள் முதலி தெரு, பிச்சனூர், குடியாத்தம். | ரூ.1,54,200.00 | |
| 4 | வி .பூபதி தபெ வாசுதேவ முதலி, 67,ஆணைகட்டி கணபதி முதலி தெரு, பிச்சனூர் குடியாத்தம். | ரூ. 1,54,500.00 | |
| **இனம். எண்.** | **தற்போது வழங்கிய ஒப்பந்தப்புள்ளிதாரர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை** | **குறிப்பு** |
| (1) | (2) | (3) | (4) |
| **4** | **தரணம்பேட்டை தினச்சந்தையில் இறைச்சி கடைகளில் சுங்கம் தண்டல் செய்யும் உரிமம்** | | |
| 1 | இ.ரகுராமன் த/பெ. ஜி.ஈஸ்வரன், 6/12,திருவள்ளுவர்நகர், பிச்சனூர், குடியாத்தம். | ரூ. 1,29,500.00 | அரசாங்க மதிப்பு ரூ.1,39,548/ ஆனால் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.1,26,862/–ல் ரூ.8,138.00 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் அதிகமாக வரிசை எண்.2–ல் காணும் நபர் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். |
| 2 | ஆர்.தயாளன் த/பெ ராமசாமி 51/17.சன்னதி தொரு நெல்லூர்பேட் குடியாத்தம். | ரூ. 1,35,000.00 | |
| **5.** | **பழைய மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துதாரரிடமிருந்து கட்டணம் தண்டல் செய்யும் உரிமம்.** | | |
| 1 | டி.பார்த்தீபன், த/பெ.தேவநாதன், 81.பஜனை கோயில் தெரு, கள்ளூர். குடியாத்தம். | ரூ. 8,30,000.00 | அரசாங்க மதிப்பு ரூ.8.29,521/ ஆனால் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.7,54,110 யை விட ரூ.75,890/ அதிகமாக வரிசை எண்.1–ல் காணும் நபர் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். |
| 2 | எஸ்.சிவக்குமார், தபெ ஆர்.சண்முகம், 13/6,எம்.பி.எம் தெரு, புதுப்பேட்டை,குடியாத்தம். | ரூ. 8,20,000.00 | |

| | | | |
|---|---|---|---|
| **6.** | **ஆடுவதை சாலையில் சுங்கம் தண்டல் செய்யும் உரிமம்.** | | |
| 1 | ஆர்.தயாளன், த/பெ ராமசாமி, 51/17.சன்னதி தொரு, நெல்லுார்பேட் குடியாத்தம். | ரூ. 3,83,000.00 | அரசாங்க மதிப்பு ரூ.4.00,208/ ஆனால் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ3,63,825 யை விட ரூ.19,175/ அதிகமாக வரிசை எண்.1–ல் காணும் நபர் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். |
| 2 | இ.ரகுராமன் த/பெ. ஜி.ஈஸ்வரன், 6/12,திருவள்ளுவர்நகர், பிச்சனுர், குடியாத்தம். | ரூ. 3,63,000.00 | |
| **7.** | **புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் தண்டல் செய்யும் உரிமம் நகர சர்வே எண்.158, வார்டு 2, பிளாக் 8** | | |
| 1 | பி.சத்தீஷ்குமார் த/பெ.பெருமாள், 74–புதுத்தெரு, கௌதமபேட்டை, கஸ்பா, குடியாத்தம். | ரூ. 9,39,350.00 | அரசாங்க மதிப்பு ரூ.9.78,285/ ஆனால் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ 8,89,350 யை விட ரூ.50,000/ அதிகமாக வரிசை எண்.1–ல் காணும் நபர் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். |
| 2 | ஆர்.செல்வம் த/பெ ராஜா 2/1ஏ,பட்டேல் பாபா சுண்ணாம்புபேட்டை, குடியாத்தம். | ரூ. 9,00,000.00 | |
| **8.** | **நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பலன் தரும் மரங்களின் பலனை அனுபவிக்கும் மற்றும் பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மரங்களின் பலனை அனுபவிக்கும் உரிமம்** | | |
| 1 | டி,பிரகாசம், 51/10 ஏ.ஜவகர்லால் தெரு நடுப்பேட்டை, குடியாத்தம். | ரூ. 75,000.00 | அரசாங்க மதிப்பு ரூ.64,688/ ஆனால் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ 58,8807 யை விட ரூ16,193/ அதிகமாக வரிசை எண்.1–ல் காணும் நபர் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். |
| 2 | எஸ்.எச்.கவுஸ் பாஷா, த/பெ ஷேக் அமீத், 3/13,1வது புது ஆலியார் தெரு தரணம்பேட்டை குடியாத்தம். | ரூ.69,000.00 | |
| 3 | எஸ்.எச்.சான் பாஷா, த/பெ ஷேக் அமீத், 3/13,1வது புது ஆலியார் தெரு தரணம்பேட்டை குடியாத்தம். | ரூ. 70,000.00 | |
| **இனம். எண்.** | **தற்போது வழங்கிய ஏலதாரா்கள்** | **ஏலம்தொகை** | **குறிப்பு** |
| 4 | எஸ்.எச்.கவுஸ் பாஷா, த/பெ ஷேக் அமீத், 3/13,1வது புது ஆலியார் தெரு.தரணம்பேட்டை குடியாத்தம். | ரூ. 71,000.00 | |
| 5 | எஸ்.எச்.சான் பாஷா, த/பெ ஷேக் அமீத், 3/13,1வது புது ஆலியார் தெரு தரணம்பேட்டை குடியாத்தம். | ரூ. 72,000.00 | |
| **9.** | **பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் தண்டல் செய்யும் உரிமம்** | | |
| **இனம். எண்.** | **தற்போது வழங்கிய ஒப்பந்தப்புள்ளிதாரா்கள்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை** | **குறிப்பு** |
| 1 | ஏ.ஜெயகாந்தன் த/பெ ஆறுமுகம் 97/95, திருவள்ளுவர் நகர் பிச்சனுர் குடியாத்தம் | ரூ. 5,71,000.00 | அரசாங்க மதிப்பு ரூ 5,.83,197/ ஆனால் சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ 5,30,179 யை விட ரூ 40,821/ அதிகமாக வரிசை எண்.1–ல் காணும் நபர் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| 2 | கே.கோகிலா, க/பெ குமரவேல், 5/9,புங்கன்னூர் அம்மன் கோவில் தெரு, சுண்ணாம்புபேட்டை குடியாத்தம். | ரூ. 5,51,000.00 | |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் இனம் எண்,2,3,4,5,6,7,8 மற்றும் 9 சென்ற ஆண்டு குத்தகை தொகையினை விட கூடுதலாக வழங்கியுள்ளதைமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இனம் எண்.1 மற்றும் 10–க்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படாததால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 3090/2018/அ1)

2. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் துப்புரவுப் பணிகள் செய்ய கிருமி நாசினி சுண்ணாம்பு நீர், பினாயில் போன்றவை தேவைப்படுவதாலும் மேலும், திருவிழா காலமாக உள்ளதால், திருவிழா நடக்கும் இடங்கள், பொது மக்கள் வந்து செல்லும் இடங்கள் மற்றும் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் அவசியம் தெவைப்படுவதாலும் கொள்முதல் செய்ய சுண்ணாம்பு நீர் – 5 டன் மற்றும் பினாயில் – 100 லிட்டர் ரூ.47,000/– ஆகும் செலவினம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு கற்பகம் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3771/2017/எச்1)

3. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 20 எண்ணிக்கை அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள் கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை – 5 அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/16/J2 நாள் : 26.10.2107–ன்படி 15.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி ஏஜென்சிஸ் மற்றும் கான்ட்ராக்டர்ஸ், குடியாத்தம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேலும், மேற்படி பள்ளிகள் தினசரி சுத்தம் செய்திட பிரஸ், ஆர்பிக், துடப்பம், ஆசிட் மற்றும் பினாயில் ஆகிய பொருட்கள் சப்ளை செய்யும் பணி தற்போது 31.12.2018 அன்றுடன் முடிவடைவதால் மீண்டும் 01.01.2019 முதல் ஓராண்டுக்கு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத்தை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

4. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை துப்புரவு பணிகளுக்கு 134 தனியார் ஆட்களை நியமித்து துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு 08.02.2019 அன்று இரு உறை மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்ட பின்னர் 11.02.2019 அன்று தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப்புள்ளி திறப்பு செய்ததில் கீழ்க்காணுமாறு ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1. | Supply of man power and undertaking Solid Waste Management (SWM) 134 workers at Municipal areas (outsourcing) in GUDIYATHAM MUNCIPALITY | 1. LD Man Power Solutions - ரூ.397.00 / நபர் ஒருவருக்கு (இதரபடிகள் உட்பட)<br><br>2. J/DEENADAYALAN - ரூ.398.00/ நபர் ஒருவருக்கு (இதரபடிகள் உட்பட) |

<u>அலுவலக குறிப்பு :</u>தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய LD Man Power Solutions நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.எச்1/2220/2018)

**5.** இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து, பணியிடை காலத்தில் காலமான பணியாளருக்கு, அன்னார் கணக்கில் உள்ள சிறப்பு சேமநல நிதித் தொகை (ம) அதற்குரிய வட்டித் தொகைவழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் | பணியாளரின் வாரிசு பெயர் | தற்போது வழங்க வேண்டிய தொகை | | |
|---|---|---|---|---|---|
| | | | சிறப்பு சேமநல நிதித் தொகை | வட்டி | மொத்தம் |
| 1. | திரு.ஜோதி, த/பெ.முனிசாமி | திருமதி.J.வள்ளியம்மாள் க/பெ.ஜோதி | 9,878 | 5,021 | 14,899 |

**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7682/2014/பி2)

6. இந்நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 08.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | Supply and delivery of Bio-Metric System in Gudiyatham Municipality<br>மதிப்பீட்டு தொகை ரூ.1,05,000/- | 1. GR Systems –மதிப்பீட்டு விகிதம்<br><br>2. Siva Electronics<br>– 2.28% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு:</u>**-வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விகித ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/1589/2018

7. இந்நகராட்சியில் ஆயுதபூஜை மற்றும் பொங்கல் தின பண்டிகையையொட்டி நகராட்சி தரப்பில் கீழ்க்காணும் நாளிதழ்களில் வாழ்த்து விளம்பரம் செய்யப்பட்டதற்கு செலவுப்பட்டியல் தொகை ரூ.89,103/-ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. Kalpublications (p) Ltd | ரூ. 9828.00 |
| 2. Daily thanthi | ரூ.23100.00 |
| 3. Dinamalar | ரூ.23100.00 |
| 4. Express Publicatin(Madurai)Ltd | ரூ.23100.00 |
| 5. Malaimalar | ரூ. 9975.00 |
| | ரூ.89103.00 |

**<u>அலுவலககுறிப்பு:</u>**-மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/1589/2018

8. இந்நகராட்சியில் கசடுகழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்ளி உரக்கிடங்கில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் ஒப்பந்தபணிக்கு மாநில அளவில் ஒப்பந்தம் குறித்த அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற விளம்பர கட்டண தொகை ரூ.1,55,925/-ஐ "Elegant Chennai" விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**-மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/3178/2018

9. இந்நகராட்சியில் UIDSSMT திட்டத்தின் கீழ் புதிய வீட்டு குடிநீர் இணைப்பு வழங்கும் ஒப்பந்தபணிக்கு மாநில அளவில் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற விளம்பர கட்டண தொகை ரூ.71,348/-ஐ "Elegant Chennai" விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**-மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/3178/2018

10. இந்நகராட்சியில் எதிர்வரும் கோடைகால குடிநீர் தட்டுப்பாட்டினை போக்கிட வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் குடிநீர் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார்செய்து மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

1. பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையத்தில் மின்மோட்டார்கள் மற்றும் கேபிள்கள் மாற்றி அமைத்தல் - ரூ.10.00 இலட்சம்.
2. பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து குடிநீர் விநியோகத்திற்கு புதிதாக குழாய்கள் அமைத்தல் - ரூ.10.00 இலட்சம்.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி பொதுநிதியின் கீழ் பணி மேற்கொண்டு வறட்சி நிவாரண நிதி (SDRF) வரப்பெற்றவுடன் திட்ட மான்யத்தை ஈடுசெய்து கொள்ளலாம்.
3. திருத்திய வரவு செலவு திட்டம் 2018-2019-ன் கீழ் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண்:-** இ1/219/2018

11. இந்நகராட்சியில் பயன்பாடற்ற நிலையில் இருந்த பொதுகழிப்பிடங்களை (பண்டர் காலனி, செருவங்கி, சந்தைப்பேட்டை) இடித்து அப்புறப்படுத்தியதில் அவ்விடத்தில் புதிதாக 3 இடங்களிலும் பொதுமக்களுக்கு வாசக அறை அமைத்துதர ஆணையர் அறிவுரையின் பேரில் மதிப்பீடு தயார் செய்து மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு<br>ரூ.(இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.18 பண்டர் காலனியில் வாசக அறை கட்டுதல் | 7.00 |
| 2. | வார்டு எண்.30 சந்தைப்பேட்டை பகுதியில் வாசக அறை கட்டுதல் | 7.00 |
| 3. | வார்டு எண்.31 செருவங்கி பகுதியில் வாசக அறை கட்டுதல் | 7.00 |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/1589/2018

12. இந்நகராட்சியில் SBM-SWM திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-19-ன் கீழ் 8-வது உயர்மட்ட குழுவில் ரூபாய்:90.80 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியதன் பேரில் 13.02.2019 அன்று இரட்டை உறை முறையில் கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்து அதனடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை விவர ஒப்பந்தப்புள்ளிகள் 18.02.2019 அன்று திறக்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | Purchase of Battery operated vehicle as per specification (19 Nos)<br>**Estimate Amt:Rs.34.20 Lakhs** | 1. Jaykay Trans, Chennai – 0.00% Less than the Estimate<br>2. Sakthi Body Works, Chennai – 3.33% Above the Estimate |
| 2 | Purchase of Mini Excavator for Soild Waste Management in Gudiyatham Municipality<br>**Estimate Amt:Rs.23.00 Lakhs** | Marwell Enncon Tech Pvt.Ltd, Coimbatore – 0.17% Less than the Estimate |
| 3 | Purchase of Light Commercial Vehicle 2cu.m capacity as per specification(6 Nos)<br>**Estimate Amt:Rs.33.60 Lakhs** | 1. Lakshmi Auto Diesel Works, Mettur – 0.00% Less than the Estimate<br>2. JVK Auto Diesel Work, Salem – 0.36% Above the Estimate |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

SBM-SWM திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒவ்வொரு இனத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த சதவீதம் வழங்கி வரிசை எண்.1-க்கு Jaykay Trans, Chennai நிறுவனத்திற்கும், வரிசை எண்.2 Marwell Enncon Tech Pvt.Ltd,Coimbatore நிறுவனத்திற்கும் மற்றும் வரிசை எண்.3 Lakshmi Auto Diesel Works, Mettur நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

மேற்படி திட்டப்பணிக்கு அரசு ஒதுக்கீடு செய்யும் மானியத்தொகைக்கு மேல் கூடுதலாக ஆகும் செலவினத்தினை நகராட்சிப் பொதுநிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும், இத்தொகையினை 2018-19 திருத்திய வரவு-செலவு கணக்கு திட்டத்தில் சேர்ந்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
**கோப்பு எண்:-** இ1/103/2019

13. இந்நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 19.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையத்தில் மின்மோட்டார்கள் மற்றும் கேபிள்கள் மாற்றி அமைத்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/- | 1. திரு.J.J.ஆனந்தகுமார்<br>- 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br>2. DCN கன்ஸ்ட்ரக்ஷன்<br>- 0.07% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையத்தில் நீர்உறிஞ்சு கிணறுகளிலிருந்து குடிநீர் விநியோகத்திற்கு புதிதாக குழாய்கள் அமைத்தல்மதிப்பீட்டு தொகை ரூ.10,00,000/- | 1. திரு.J.J.ஆனந்தகுமார்<br>- 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br>2. DCN கன்ஸ்ட்ரக்ஷன்<br>- 0.07% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வரிசை எண்.1மற்றும்2-ல் உள்ள திரு.J.J.ஆனந்தகுமார் அவர்களின் ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.
3. மேற்காணும் பணிகளுக்கு SDRF திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும் பொழுது மேற்காணும் நிதியை குடிநீர் நிதியில் ஈடுசெய்யலாம்.**ந.க.எண்:-** இ1/219/2019

14. இந்நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டு **கல்வி நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.32 காமாட்சியம்மன் பேட்டை நகராட்சி துவக்கப்பள்ளி, வார்டு எண்.16 சுண்ணாம்புபேட்டை நகராட்சி துவக்கப்பள்ளி கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.1,70,000/- | 1. திரு.S.குமரேசன்<br>- 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.J.J ஆனந்தகுமார்<br>- 0.07% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.S.குமரேசன் அவர்களின் ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/2918/2015

15. இந்நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டு **பொது நிதித்** திட்டத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.35 அண்ணாஜிராவ் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் வார்டு எண்.23 இராசி அருணாச்சலம் தெருவில் சிறுபாலம் அமைத்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.1,70,000/- | 1. திரு.V.வில்வநாதன்<br>- 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.S.குமரேசன்<br>- 0.07% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | |
|---|---|---|
| 2 | உள்ளி உரக்கிடங்கில் கசடு கழிவுநீர் (சுமார் 2.00 ஏக்கர்) சுத்திகரிப்பு நிலையம் அமைக்க குப்பைகளை அப்புறப்படுத்தி சமன்செய்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.9,00,000/- | 1. பநீ அங்காளபரமேஸ்வரி ஏஜென்சீஸ் (ம) கான்ட்ராக்டர்ஸ் - மதிப்பீட்டு விகிதம்<br><br>2. பநீ அங்காளபரமேஸ்வரி வெல்டிங் ஒர்க்ஸ் – 0.07% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு:-</u>**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விகிதம் மற்றும் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வரிசைஎண்.1 திரு.V.வில்வநாதன், வரிசை எண்.2 பநீ அங்காளபரமேஸ்வரி ஏஜென்சீஸ்(ம)கான்ட்ராக்டர்ஸ் அவர்களின் ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/1589/2018

16. இந்நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் கணினி பொருட்கள் கொள்முதல் செய்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.1,95,000/- | 1. PSR System - மதிப்பீட்டு விகிதம்<br>2. Sree Universal Computers – 0.07% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு:-</u>**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய PSR System நிறுவன ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/1589/2018

17. இந்நகராட்சியில் IUDM 2018-19 திட்டத்தின் கீழ் ரூ.372.60 இலட்ச மதிப்பீட்டிலான சாலை பணிகளுக்கு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டண தொகையாக ரூ.1,12,776/- வரப்பெற்றதை "Elegant, Chennai" விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்:- இ1/0074/2019

18. இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 8-வது உயர்மட்ட குழுவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 13.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மாநில அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு விளம்பர கட்டண தொகை ரூ.53,071/-ஐ "Elegant, Chennai" விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்:- இ1/103/2019

19. கல்விநிதியின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 காமாட்சியம்மன்பேட்டை நகராட்சி துவக்கபள்ளி மற்றும் வார்டுஎண்.16 சுண்ணாம்புபேட்டை நகராட்சி துவக்கப்பள்ளி, கட்டிடங்களுக்கு வர்ணம் பூச தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.70 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதிவேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கல்வி நிதியின் கீழ் பணிமேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்:- இ1/2918/2015

20. இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 7-வது உயர்மட்ட குழுவில் பரிந்துரைக்கப்பட்டதன்படி வார்டு எண்:14 வைத்தீஸ்வரன்நகரில் நுண்ணுர சேகரமையம் ரூ.51.50இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் கடித எண்: 22866/ப்பி3/2018 நாள்:23.08.2018 இடம் தேர்வு செய்யப்பட்டு பணி துவங்கிய நிலையில் அப்பகுதிவாசிகளால் குடியாத்தம் முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு எண்:ஓ.எஸ்.153/2019-ன்படி பணி ஆரம்பிக்காமல் இருக்க தடையுத்திரவு பெறப்பட்டது.மேற்காணும் வழக்கின் காரணமாக 18.01.2019 முதல் தடையுத்திரவின்பேரில் பணி ஆரம்பிக்காமல் உள்ளது. மேலும் தூய்மை இந்தியா திட்டப்பணி குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்படவேண்டுமாதலால் மேற்காணும் நுண்ணுர சேகர மையம் மாற்று இடத்தில் அமைக்க இடம் ஆய்வு

செய்யப்பட்டதில், ஆணையர் குடியிருப்பு வளாகத்தில் போதுமான இடவசதி உள்ளது என கண்டறியப்பட்டது. மேற்காணும் ஆணையர் குடியிருப்பு வளாகத்தில் நுண்ணுர சேகர மையம் கட்டுமான பணி செய்ய மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தூய்மை இந்தியா திட்டத்தில் நுண்ணுர சேகர மையம் ஆணையர் குடியிருப்பு வளாகத்தில் அமைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,வேலூர் அவர்கள் வாயிலாக நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடம் அனுமதி பெற உரிய பிரேரணை அனுப்ப மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்:- இ1/2047/2018

21. இந்நகராட்சிக்கு சொந்தமான TN23CZ3137 Scorpio வாகனம் பழுதுநீக்கம் செய்தவதற்கு ஆகும் செலவினதொகை ரூ.28,640/-ஐ பழுதுநீக்கம் செய்யும் "ஜெயின் கார்ஸ்" வேலூர் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு:-** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.ந.க.எண்:- இ1/2047/2018

22. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட செருவங்கி, ஒளவைநகர் திரு.ரவி என்பவர் குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் I.A.No.02/2019, O.S.No.37/2019 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக நடத்திடவும் நகராட்சி வழக்கறிஞர் திரு.கே.எம்.பூபதி அவர்களிடம் வழக்கினை ஒப்படைக்கவும், மேற்படி வழக்கிற்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யவும், வழக்கிற்கான கட்டணத்தை நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.376/2019/எப்1)

23. இந்நகராட்சியில் பொதுநிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| **வரிசை எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சிக்குட்பட்ட 4 இடங்களில் Onsite Composting தொட்டி மற்றும் மேற்கூரை அமைக்கவும் மற்றும் ஏற்கனவே அமைக்கப்பட்ட 5 (Onsite Composting Pit) இடங்களுக்கு மேற்கூரை அமைத்தல் பணி | 6.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரவு செலவு திட்டம் 2018 -19-ன் கீழ் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

24. இந்நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 20.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சிக்குட்பட்ட 4 இடங்களில் Onsite Composting தொட்டி மற்றும் மேற்கூரை அமைக்கவும் மற்றும் ஏற்கனவே அமைக்கப்பட்ட 5 (Onsite Composting Pit) இடங்களுக்கு மேற்கூரை அமைத்தல் பணி மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000/- | 1. JKN Builders – 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br>2. S.Sivakumar – 0.14% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு:-**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவாக வழங்கிய JKN Builders ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/399/2017

25. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி பிரிண்டர்களுக்கு தேவையான Toner Catridge-கள் கீழ்காணும் எண்ணிக்கையினை கொள்முதல் செய்ய ஆகும் செலவின தொகை ரூ.6,33,955/-ஐ Napco Print,Vellore கூட்டுறவு நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய மன்ற நிர்வாக அனுமதிவேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

1. 12A Catridge - 80 எண்ணிக்கை
2. 88A Catridge - 40 எண்ணிக்கை
3. TVS Dotmatrix Catridge - 25 எண்ணிக்கை

**அலுவலககுறிப்பு:-**மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்:- இ1/1589/2018

26. குடியாத்தம் நகராட்சியின் 2019-2020 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம். (ந.க.எண்.5014/2014/பி1)

27. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி TN 23 AU 1182-க்கு பேட்டரி பழுதடைந்து விட்டதால் புதிதாக பேட்டரி வாங்குவதற்கு 21.02.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வேலூர் பேட்டரி சென்டர்<br>19, காட்பாடி ரோடு,வேலூர். | ரூ.8,740/- |
| 2 | தி ஆட்டோ டீசல் சர்வீஸ்<br>67ஏ, காட்பாடி ரோடு,வேலூர். | ரூ.9,350/- |
| 3 | வேலூர் பேட்டரி சென்டர்<br>2/ஏ, புதிய காட்பாடி ரோடு,<br>(ஆரியஸ் ஓட்டல் அருகில்) வேலூர். | ரூ.9,200/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 வேலூர் பேட்டரி சென்டர், 19, காட்பாடி ரோடு, வேலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:** மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம். **ந.க.எண். 402/2019/எச்1.**

### 28. 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உபவிதிகள்

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3,6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன் படி 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் நெகிழி (Plastic) மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உபவிதிகள் ஏற்படுத்தலாம்.

1 (i) **செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

(ii) **ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **மேல்முறையீட்டு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **தண்டனைகள் விதிக்கும் முறைகள்**: ஷை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள்

5 (v) வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :

1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்
   a) 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   b) 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   c) 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   d) 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
   e) 2000-ம் அதற்கு மேல்.

2. வணிக வளாகங்கள்:

a) பெரிய மற்றும சிறிய துணிக்கடைகள்,
b) பல்பொருள் அங்காடிகள் பெரியது,
c) திரையரங்குகள்,
d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்,
e) கல்வி நிறுவன வளாகங்கள்,
f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்,
g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் உணவகங்கள் பெரியது முதலானவை,
h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்,
i) தீப்பெட்டி தயாரித்தல் மற்றும் பீடி தொழில்

3 மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள்உணவகங்களபழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

4 சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்

## II தண்டனைகள் விபரம்

**பிரிவு 306 (28-A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும பகிர்ந்தளித்தல் | ஐந்தாயிரம் ரூபாய் | பத்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஐநூறு ரூபாய் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. **2019 –ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12–ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள உபவிதிகளை 01.03.2019ஆம் நாள் முதல் இந்நகராட்சி பகுதியில் நடைமுறைபடுத்துவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.**
2. மேற்கண்ட உபவிதிகளை வேலூர் மாவட்ட அரசு நாளிதழில் பிரசுரம் செய்வதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.50000/–க்கும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண். 2753/2012/எச்1

**29.** குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.07, பிளாக் எண்.07, நகரளவு எண்.864/1 கொண்ட சர்க்கார் புறம்போக்கு ரோடு என நில அளவு ஆவணங்களில் பதியப்பட்ட இடத்தில் போக்குவரத்துக்கு பாதிப்பு இல்லாமல் கூடுதலான அகலம் உள்ள இடத்தில் ஏற்கனவே வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுலவலகம் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கட்டடம் கட்டப்பட்டுள்ள இடத்திற்கு வடக்குப் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் குடியாத்தம் வட்ட குறுவட்ட அளவருக்கான குடியிருப்பு கட்டடம் கட்ட நகராட்சியின் தடையில்லாச் சான்று கோரி வட்டாட்சியர், குடியாத்தம் அவர்களின் கடிதம் ந.க.எண்.இ/3348/2017 நாள் : 17.10.2018 மற்றும் 06.02.2019–ம் தேதிய கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** மேற்படி இடம் நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் ஆணையாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டதில் நகராட்சி எல்லைக்கு அருகில் பாலிடெக்னிக் கூட் ரோடில் உள்ள பயணியர் விடுதிக்கு கிழக்கு பக்கம் உள்ள சாலையில் போக்குவரத்துக்கு பாதிப்பு இல்லாமல் கூடுதலான அகலம் உள்ள இடத்தில் ஏற்கனவே வருவாய் ஆய்வாளர் கட்டடத்திற்கு வடக்குப் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் குடியாத்தம் வட்ட குறுவட்ட அளவருக்கான குடியிருப்பு கட்டடம் கட்ட நகராட்சிக்கு தடையில்லை என மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.168/2019/எப்1)

**தனி அலுவலர் / ஆணையர்,**
**குடியாத்தம் நகராட்சி.**